மாதர் மனோரஞ்சினி.

VOL. 1.	MADRAS: FEBRUARY 1900.	No. 12.
புத். க.	சென்னை, 1900-ஹு பிப்பிரவரிமீ	இல. கஉ.

மாயாபுரி விநோதக் கதை.

(முன்தொடர்ச்சி.)

பிறகு, அருணாசலம் பிள்ளையவர்களைப்பணிந்து தமது வரலாறு கேட்க மிகுதியுமாவலாயிருக்கிறேனென ஐயா! ஆக்கப்பொறுத்து ஆறப்பொறுமலிருப்பானேன், ஊரினுமது ஆதரவுக்குட் சில காலமிருக்கும்படி ஆண்டவன் அநுக்கிரகம் புரிந்திருக்கிறார்.

என் சரித்திரமுமக்குத் தெரியவேண்டியதவசியம். அது மிக இரகசியமானதும், விசேஷமுள்ளதுமானதால் நான் தனியான ஜாகையிலிருந்து கொண்டு உம்மோடு என் வரலாறு சொல்லவேண்டும் என்று கூறினர். அருணாசலம் பிள்ளையவர்கள் நல்லது தமது சித்தம்போலவே யாகட்டுமென்றார். உடனே சிவசுவாமி ஐயரவர்களுடைய பத்தினி வந்து, குழந்தை பாலருந்தியது, நானும் பாலுண்டு களைதீர்ந்தேனென்று கூற, அது கேட்டு அருணாசலம் பிள்ளையவர்கள் சுவாமி அதோ தெரிகிற சிறிய கட்டடத்திலிருப்போம்; கருணைகூர்ந் தெழுந்தருள்கவென்று பிரார்த்திக்க, அப்படியே நல்லதென்று ஐயரவர்கள் தமது பத்தினியை யழைத்துக்கொண்டு புறப்பட்டு வந்தார். அருணாசலம் பிள்ளையவர்களுள்ளக் களிப்போடு முன்னே நடக்க, ஐயரவர்கள் தமது பத்தினியோடு பின் தொடர்ந்து சென்றார். பிள்ளையவர்கள் மிக அவசரத்தோடு சாவடிக்குட் புகுந்து தமது கையால் ஓராசனம் போட்டு, பக்கத்தில் நின்ற ஓர் வேலைக்காரன் முகத்தைப்பார்த்துச் சீக்கிரமாய் வீட்டுக்குப்போய், எனது பத்தினியுடன், எனது புத்திரியையும், சகோதரியையும் அழைத்துக்கொண்டுவா தாமதியாதே யென்று கட்டளையிட அவனுமோட்டோட்டமாகச் சென்றான். பிள்ளையவர்கள் நித்தியம்போலல்லாமல், அருகிலிருப்போரைக் கவனியாமல்தமது கையால்

ஆசனமெடுத்துப் போடுவதையும், பத்தினி முதலானவர்களை யழைத்து வரும்படி கட்டளையிட்டதையும், அங்கு வந்திருப்பவர்கள் கண்டு பேராச்சரிய மடைந்து, இஃதென்னவென்று ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு வாய்திறந்து பேசாமல் நிச்சப்தமாயிருந்தார்கள். உடனே பிள்ளையவர்கள் வெகு அவசரமாய் வெளியில் வந்து சற்று நேரத்துக்குள் ஐயரவர்களைப் பத்தினியோடழைத்து வந்து ஆசனங்களின் மேலுட்காரச்செய்து பாதத்தில் வணங்கி உள்ளங்களித்து நின்றார். ஐயரவர்கள் பிள்ளையவர்களையுட்காரென்னவும் உட்காராமல் வாசலைப்பார்த்த வண்ணமாயிருந்தார். சிறிது நேரத்துக்குள் பிள்ளையவர்களுடைய பத்தினி நாயகன் கட்டளைப்படி தன்னிளம் பருவமுள்ள புத்திரியையும், நாத்தனாரையுமழைத்துக் கொண்டுவந்து, உட்பிரவேசிக்கப் பிள்ளையவர்கள் பெண்ணே நமது குருநாதரெழுந்தருளி யிருக்கிறார், நமஸ்கரித்துக்கொள்ளுங்களென்ற வுடனே தனது நாத்தனார், புத்திரி, யிருவரோடும்போய் ஐயரவர்களைப் பத்தினியாரோடு பணிந்து, அவர்களாசீர்வசனம் பெற்றுத் தலைகுனிந்து நின்றாள். பிள்ளையவர்கள் பத்தினியைப்பார்த்துப் பெண்ணே அம்மாளை யழைத்துக் கொண்டு அந்த அறைக்குட்போயிரு ஆட்களை வீட்டுக்கனுப்பி, நமது குருசுவாமிக்கும், அம்மாளுக்கு மிராப்போஜனத்துக்கு வேண்டிய பதார்த்தங்களையும், பாத்திரங்களையு மழைப்பித்துக்கொடுத்துச் சமையல்செய்யும்படி திட்டம்செய்; இரவில் சுவாமிகள் புசித்த பிறகு தான் நாமுண்ண வேண்டும். நாமெதிர்பார்த்திருந்த மஹாத்துமாக்களிவர்களே யென்று சொல்லி முடித்தார். அப்படியே அவருடைய பத்தினியா ரந்த அம்மாளை வெகு பயபக்தி விசுவாசத்தோடு அடுத்த அறைக்குள்ளழைத்துக்கொண்டுபோய் ஓராசனத்தின் மேலுட்காரச்செய்து, பிரியமுண்டாகும்படி பலபல இன்பமான வசனங்களைக்கூறி, அம்மணீ எனது நாயகர் சில நாட்களுக்கு முன் நமக்கு நல்வழிகாட்டும் குருசுவாமி யெதிர்ப்படுங்காலம் சமீபமாயிருக்கிறது, வெகு சீக்கிரத்தில் வந்துசேர்வார்களென்று கூறினார், அவ்வாறே யின்றையதின மெங்களுக்கு நல்லதின மாகையால் தங்கள் தரிசனங்கிடைக்கப் பெற்றோம். இனிமேல் தாங்களென்னை வேறாகப் பாவியாமல் மனமொத்து நேசித்து இந்த வூரிலேயே வசித்திருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். தங்கள் தெரிசனங்கண்ட மாத்திரத்தில் என்னுள்ள முருகுகிறது. என்னையறியாமல் ஆனந்த மேலிடுகிறது, என்பேர் மஹாலட்சுமி, இந்தச்சிறிய பெண் என் புத்திரி ஞானம்பாள், அதோ இருக்கிற பெண் எனது பர்த்தாவினுடைய மூத்த சகோதரர் புத்திரி, எனக்கு நாத்தனர்; என் மனதுக்கு வேறுபடாதவள், நல்ல குணசாலி; ஆகையால்

எங்கள்மேலன்பு வைத்துப் பாதுகாக்கப் பிரார்த்திக்கிறேனென்றாள். மஹாலட்சுமி கூறிய இனிய வசனங்களால் அம்மாள் மனமகிழ்ச்சி யடைந்து மஹாலட்சுமீ, உங்களுடைய ஆதரவிற் சிலகாலம் வசித்திருக்கும்படி ஆண்டவன் கட்டளையிருக்கிறதென்று எனது நாயகர் கூறி அழைத்து வந்தார். இவ்விடத்திலுன்னையன்றி எனக்கு வேறுதுணையார்? பல பல பேச்சுக்க ளென்னத்துக்கு? நீயும், நானும் சகோதரியாய்விட்டோம். இனி நாம் மனமொத்திருக்கவேண்டும். அதிற்றடையில்லை. என்பேர். விஜபலட்சுமி, குழந்தைக்கு இன்னம் பேரிடவில்லை.மற்றைய சரித்திரமெல்லாம் என் பிராணநாதர் தெரிவிப்பார். ஒருவரிடத்திலும் நமது வரலாறு கூறாதே யென்று கட்டளையிட்டார். ஆதலால் நான் கூறவில்லை யென வருந்தாதே யென்று முடித்தாள். பிறகு மஹாலட்சுமி, ஞானம்பாள், நாத்தனார் பானுமதி, விஜபலட்சுமி நாலுபேரும் நெடுநாட் பழகினவர்களைப் போல மனமொத்துப் பல பல பேச்சுக்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். சிறிது நேரத்துக்கெல்லாம் மஹாலட்சுமி கட்டளைப்படி பாத்திரங்களும், பதார்த்தங்களும் வந்து சேர்ந்தன, மஹாலட்சுமி யெழுந்திருந்து அம்மணீ நேரமாகிறது. மிகவுங் களைத்திருக்கிறாய்போல் காண்கிறது. போஜனத்துக்கு ஆயத்தஞ் செய்யுங்கள். சகலமுந் தயாராகவிருக்கிறது. அதுதான் சமையலறையென்றழைத்துக்கொண்டுபோனாள். விஜயலட்சுமி அம்மாள் மறுபடி சரீரசுத்தி செய்துகொண்டு, சமையற்கூடத்திற் புகுந்து வெகு சீக்கிரத்திற் சமையல் வேலையை முடித்துவிட்டு மஹாலட்சுமி யிடம் வந்து பேசிக்கொண்டிருந்தாள். மஹாலட்சுமி, விஜயலட்சுமியினுடைய வேலைச் சாதுரியத்துக் காச்சரியப்பட்டு அம்மணீ சமையலாயிற்றோ, வெகு சீக்கிரமா யிருக்கிறதே. பதார்த்தங்கள் சரியாகச் செய்யவில்லையோவென மஹாலட்சுமீ! அன்று கிடைத்ததை மறுநாளைக்கென வைக்கவேண்டாமென்று என் பர்த்தா கட்டளையிட்டிருக்கிறபடியால் எல்லாஞ் சமைத்துவிட்டேன். நான் கொஞ்சம் பாலுண்டு சிறிது பசியாறி யிருக்கிறேன். என் பிராணநாதருண்ணாமற் பட்டினி யிருக்கின்றார். அந்தக் கவலையென் மனதை வாட்டுகிறபடியால் சமையல் சீக்கிரமாய்விட்டது. பர்த்தாவைத் தெய்வமென்று கருதி அவரது பணிவிடை செய்வோர்க்குப் பஞ்சபூதங்களுமேவல் செய்யுமல்லவா, அதை நீ யறியாயாவென்ன, மஹாலட்சுமி விஜயலட்சுமியினுடைய கற்புடைமைக்கு மெச்சி, நீயே பிரத்தியட்ச அருந்ததி, நீயே யென் குரு எனக்கு நல்வழி காட்டிக்கொண்டு என்னை விட்டகலாமலிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்து, ஞானம்பாளைப் பார்

த்து அம்மா! அப்பா அவர்களிடஞ் சென்று யாவுந் தயாராயிற்றென்று சொல்லிவாவென்றாள். ஞானம்பாள் அருணாசலம் பிள்ளை யவர்களிடஞ் சென்று நிற்க, அந்தக் குறிப்பறிந்த பிள்ளையவர்கள் அம்மா ஞானம்பா நான் வருகிறேன், நீ போவென்று, அனுப்பிவிட்டுச் சுவாமி அநுஷ்டான காலமாயிற்று சீக்கிரம் மாலைக்கடன்முடித்துக்கொண்டு போஜனஞ் செய்த பின் பேசிக்கொள்வோம் சீக்கிரமெழுந்தருளவேண்டுமென்று வேண்ட, ஐயாவர்களுடனே யெழுந்திருந்துபோய் அனுட்டான முடித்துக்கொண்டு போஜன மருந்திப் பின் வெளியில் வந்து, பிள்ளையவர்களே தாங்கள் பத்தினி முதலானவர்களோடு மிங்கே போஜனஞ்செய்ய வேண்டும். நாமொருமனதாய்க் கலந்திருக்கவேண்டிய நாளின்று முதலாகவாத லால் தடைசெய்யாமல் எழுந்திருமென்று கூறப்பிள்ளையவர்கள் சுவாமி தமது கட்டளைக்கு மறுவார்த்தை பேசுவேனே! என்றெழுந்திருந்து, தமது பத்தினி, சகோதரி, புத்திரியோடு போஜனத்துககுட் கார்ந்தார். ஐயர் உள்ளேபோய் பெண்ணே பிள்ளையவர்களுக்குப் பரிமாறென்று கூறினர். இதற்குள் பிள்ளையவர்கள் தமது மனைவியை நோக்கிப் பெண்ணே! இதென்ன! புதுமை ஏதாவது சொன்னையோ? சாமான்களை யதிகமாக வைத்தனையோ? யாதுகாரணமென்ன; அவள் பிராணநாதா! நான் அப்படிச் செய்வேனே? நான் இருவருக்குப் போது மான பதார்த்தங்களே கொண்டுவந்துவைத்தேன். அந்த அம்மாளெங்க ளிடம் பேசிக்கொண்டும் குழந்தையோடு விளையாடிக்கொண்டு மிருந் தார்களே யொழிய அதிகமாகச் சமையலறைக்குட் புகுந்திருக்கவே யில்லை. சமையலானநேரம், அந்த அம்மாள் நடந்துகொண்ட மாதிரியையும் பார்த்தால் எனக்கே வெகு ஆச்சரியமாகவிருக்கிறது. நானுமாச்சரியப் பட்டே அந்த அம்மாளைப்பார்த்து நாழிகையாகிறதே சீக்கிரமாகச் சமை யல் செய்யவேண்டாமோவென்றேன், சமையல் முடிந்து இரண்டு நாழிகை யாய்விட்டதே யென்றார்கள். இஃதென்ன தெய்வத்தன்மையாயிருக்கிறது என்று மனதுக்குள்ளெண்ணிக்கொண்டு சும்மா இருந்துவிட்டேனென்றாள் உடனே விஜயலட்சுமியம்மாள் அவர்களை யழைத்துவாருங்களென்ன ஐயரவர்கள் வந்து போஜனத்துக்கு வாருங்களென்று அழைத்துப் போனார், நால்வருக்கும் நாலிலைபோட்டுப் பரிமாறியிருந்தது. நாலுபேரு முட்கார்ந்து உண்டு, தேவாமிர்த போஜனமுண்டவர்களைப்போல மனமகிழ்ந்து, கைகால் சுத்திசெய்துகொண்டு, சந்தோஷமாகப் பேசிக்கொண் டிருக்கையில், பிள்ளையவர்கள் தமது மனைவியை நோக்கிப் பெண்ணே! சுவாமியவர்கள் வசிப்பதற்குத் தகுதியான வீடுவேண்டுமே, எங்கே திட் டஞ் செய்யலாமென, மஹாலட்சுமி, சுவாமி மறந்துபோனேன். நான் நமது

வீட்டுக்கு எதிர்வீட்டைச் சுவாமியவர்களுக்குச் சீர்படுத்தும்படி திட்டஞ் செய்துவிட்டேன்.

தேவதஞ்சரீ அம்மாள்.

(இன்னும் வரும்.)

குடும்பசம்ரக்ஷணை.

(முன்தொடர்ச்சி)

குடும்பசம்ரக்ஷணையைக் குறித்து நமது தேசத்தில் நல்லஏற்பாடுகள் இல்லாமலிருப்பதற்கு அநேக காரணங்கள் உண்டு. அவைகளில் முக்கியமானது மாதர்கள் கல்வியறிவில்லாமல் இருப்பதே. சாதாரணமாய் எல்லாதேசங்களிலும், முக்கியமாய் நமது தேசத்திலும், புருஷர்கள் தங்கள் தங்கள் தொழிலைச்செய்துகொண்டு குடும்பவிஷயங்களைச்சரிவர நடத்தப் போதுமான ஒய்வு இல்லாதவர்களாயிருக்கிறார்கள். மாதர்களுக்கோ அப்படியல்ல. அவர்கள் எப்பொழுதும் வீட்டிலேயே இருப்பவர்களாதலாலும், வீட்டுசம்பந்தமான விஷயங்கள் யாவற்றையும் தெரிந்தவர்களாதலாலும், அவர்களே குடும்பசம்ரக்ஷணையை அத்தியாவசியகம் வகிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். ஆகையால் மாதர்களுக்குத் தகுந்த சாமர்த்தியமும், அறிவும் வேண்டியதென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். கணவன் எவ்வளவு பொருளைச் சம்பாதித்தாலும், இல்லாள் அப்பொருளில் வேண்டியபாகத்தையே அத்தியாவசியகமான விஷயங்களுக்காகச் செலவழித்து மிகுதியாயுள்ளதை சேர்த்துவைக்காமற்போனால் என்ன பிரயோசனம்? இல்லாள் கல்வியறிவில்லாதவளாயிருந்தால் அவள் இக்காரியத்தை எவ்விதம் செய்யக்கூடும். சாதாரணமாய் நமது தேசத்தில் மாதர்கள் கல்வியறிவில்லாமலும் குடும்ப சம்ரக்ஷணைக்கு உபயோகமில்லாமலும் இருப்பது (ஸ்திரீகள் கையில்பொருளும் புருஷர்கையில் குழந்தையும் நிலைதங்கா) என்னும் பழமொழியை அறிவிக்கிறது. கல்வியில்லாத மாதர்கள்தங்கள் கையில் அகப்பட்டபொருளை வீணானநகைகளுக்கும், இன்னும் சில உபயோகமில்லாத விஷயங்களுக்குமே செலவழித்துவிட்டு முக்கியமாய் வேண்டியவைகளுக்கும், சுகத்தை உண்டாக்கக்கூடியவைகளுக்கும் திரவியத்தை உபயோகப் படுத்தாமலிருப்பார்கள். இது இப்படியிருப்பதால் பகல் முழுவதும் கஷ்டப்பட்டு களைத்து, சோர்ந்து ஆபீசிலிருந்து வீடுவந்துசேர்ந்த புருஷனுக்கு சௌக்கியங்கள் எப்படி உண்டாகும்? சாப்பிட நல்ல உணவாகிலும் இல்லாமற்போயிற்றேயென்று யோசிப்பது எவ்வளவு விசனமாயிருக்கும்!

வீட்டில் பதார்த்தங்களை விசேஷமாய்ச் சேகரித்துவைத்து சௌக்கியத்தையடைய அதிகபொருள் அவசியமில்லை. வீட்டிற்குள் தாராளமாய் காற்றுவீசும்படி செய்வதற்கும், வஸ்திரங்களை சுத்தமாய் வைத்துக்கொள்வதற்கும், சமையல்முதலிய வீட்டுக்காரியங்களை சுத்தியாய் செய்வதற்கும் வேறு பொருள்வேண்டியது அவசியமில்லை. ஆகையால் இக்காரியங்களைச் செய்வதற்கு முக்கியமாய் கல்வியறிவு இருக்கவேண்டியது. புருஷர்களுக்கு இவ்விஷயங்கள் எவ்வளவு தெரிந்திருந்தாலும், அவர்கள் எப்பொழுதும் வீட்டில் இல்லாமலிருப்பதினால் அவர்களுடைய அறிவு பிரயோசனத்தைத்தரத்தக்கதன்று. ஒருவேளை விசேஷ ஒய்வுஉடையவர்களாயிருந்தாலும், குடும்பசம்ரக்ஷணையில் தாங்கள் ஏற்படுத்திய நியமப்பிரகாரம் நடத்துவதில் தங்கள் மனைவிகளும் அப்படிச்செய்வது தங்கள் கடைமையென்று எண்ணி நடவாவிட்டால் புருஷர்களுடைய பிரயத்தனங்கள் என்னவது? ஆதலால் குடும்பசம்ரக்ஷணையில் நம்தேசத்தார் விருத்தியடைய விரும்புவார்களானல், தாங்கள் நிறைவேற்ற எண்ணினகாரியங்கள் நல்லதென்று மாதர்களும் அறிந்துகொள்ளும்படி செய்யவேண்டும். அதாவது புருஷர்களைப்போலவே அவர்களும் கல்வியறிவுடையவர்களாயிருக்க வேண்டுமென்பதே.

குடும்பசம்ரக்ஷணையின் முறையாகிய பெருங்காரியத்தில் நல்ல ஏற்பாடுகள் வேண்டுமென்று கோரும் மாதர்களுக்கு தக்கவாறாக பின்வரும் விஷயங்கள் விவரித்து பிரசுரிக்கப்படும்.

அவையாவன :

1. காற்று, 2. வெளிச்சம், 3. சுத்தி, 4. ஜலம், 5. ஆகாரம், 6. வஸ்திரங்கள், 7. நகைகள், 8. வரவு, செலவு, 9. தேகசௌக்கியம், 10. குழந்தைகளைவளர்க்கும் முறையும், அவர்களுக்கு கல்விகற்பிக்கும் முறையும், 11. இன்னும் மற்றவைகளுமே.

C. S. இராமசுவாமி அய்யர்.

முகவுரை முற்றிற்று.

தீர்க்க ஆயுளும் அதை அடையும் மார்க்கமும்.

நமக்கு தெரிந்து அநேக நூறு வருஷங்களாக அதிக நாகரீகமடைந்து எல்லாவிஷயங்களையும் ஆராய்ந்து உண்மை தெரிந்து கொள்வதற்கு வேண்டிய சாமர்த்தியமுடைய அநேக வித்துவான்கள் அவரவர் தேசத்திலும் பற்பல காலங்களிலும் 'ஜீவன்' என்று சொல்லப்படும் வஸ்து என்னவென்று பலவாறாக விசாரணை செய்வதிலேயே தங்களுடைய வாழ் நாள்களையெல்லாம் செலவுசெய்தபோதிலும், இது வரையிலும் பிராணிகளின் உயிரைப்பற்றி ஒருவரும் திருப்திகரமான சரித்திரத்தை ஜனங்களுக்கு கொடுக்க சக்தியுள்ளவராக இருக்கவில்லை. முன் காலத்தில் தத்துவக்கல்லினால் இறந்துபோன பிணங்களுக்கு உயிர் உண்டாக்கலாமென்றும், இரும்பு முதலான உலோகங்களைத் தங்கமாகமாற்றிவிடலாமென்றும்சொல்லிக்கொண்டு அநேகர் தாங்கள் ஏமாந்துபோனது மன்றி உலகத்தா ரெல்லாரையும் ஏமாற்றிவிட்டார்கள். இதெல்லாம் முழுப்பொய் என்று உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெகு தெளிவாக இக்காலத்து சாஸ்திர விசாரிகளால் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் கூட அநேக சாஸ்திரிகள் ஜீவனுக்கு முக்கியாதாரமாக விருக்கும் வஸ்துக்களின் சுபாவம் தங்களுக்கு தெரிந்துவிட்டதாகவும் ஆகையால் சீக்கிரத்தில் ஜீவனைப்பற்றிக்கூட தாங்கள் முடிவான அபிப்பிராயம் சொல்லக்கூடுமென்றும் பிதற்றிக்கொண்டும் ஏமாந்து போகிறார்கள். இவர்களும் உண்மைக்கு வெகு தூரத்தில் தானிருக்கிறார்களென்பது நிச்சயம்.

இவ்விதமாக ஜீவனைப்பற்றி நமக்கு ஒன்றும் தெரியாமல் போனபோதிலும் நம்முடைய அநுபோகத்தினால் நாம் தெரிந்துகொண்டவரையில் ஜீவஜெந்துக்களின் வாழ்நாளின் பிரமாணத்தைப்பற்றியும் மனிதர்களின் வாழ்வுக்கு உள்ள இடையூறுகளைப் பற்றியும் அவைகளைத் தடுத்து மானிட வாழ்வை நீட்டுவதற்கு வேண்டிய சாதனங்களைப் பற்றியும், இப்பொழுது கொஞ்சம் பேசுவோம்.

முதல் முதலில் மனிதர்களின் ஜீவகாலப்பிரமாணத்தைப்பற்றியோஜித்தால், நம்முடைய வேதங்கள் புராணங்கள் சாஸ்திரங்கள் எல்லாம் நாம் 100 வருஷகாலம் தான் ஜீவிக்கக்கூடியவர்களென்று கூறுகின்றன. சில கிரந்தங்களில் மனிதர்கள் 400, 500 வருஷங்கள்கூட ஜீவிக்கலாமென்று சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் சொல்லப்பட்டிருப்பது பொய்யாக இராமல் போனாலும், இக்கலியுகத்து மனிதர்களுக்குசொன்னதாகத் தோன்றவில்லை. ஏனென்றால் வைத்தியசாஸ்திரப்படியும் நம்முடைய அநுபோகத்தி

ன்படியும் மனிதர்களின் ஜீவப்பிரமாணம் 100 வருஷத்துக்கு மேல் நீடிப் பதே இல்லை. 70 வயதுக்கு மேற்படுவது மிக துர்லபமாக இருக்கிறது. இதுவும் உயர்ந்தவகுப்புமனிதர்களுக்குத் தான். தாழ்ந்தவகுப்பைச்சேர்ந்த வர்கள் இன்னும் குறைந்த வயதிலேயே இறந்து போகிறார்கள். இதிலிரு ந்து நாம் ஊகிக்கக்கூடிய தென்னவென்றால் அதிக சிரமப்பட்டு உழைப்பது ஜீவ விருத்திக்கு பெரிய இடையூறாக இருக்கிற தென்பதுதான்.

மனிதனைத் தவிர, கீழ்ப்பிராணிகளிலும்ஜாதிவித்தியாசத்தினால் அவை களுடைய ஜீவகாலப்பிரமாணம் வெகு வேறுபட்டிருக்கிறது. பெருத்தசரீ த்தையுடைய பிராணிகள் சிறுத்த சரீரத்தையுடைய பிராணிகளைப் பார்க்கி லும் நீண்டகாலம் ஜீவிக்குமென்று நாம் எக்காலத்திலும் கொள்ளக் கூடாது. இதற்கு உதாரணமாக அடியில் கூறப்பட்டிருக்கிறதை எடுத்துக் கொள்ளுவோம். கிளி என்று சொல்லப்படுகிற சிறிய பக்ஷியானது 20 வருஷகாலம் ஜீவிக்கக்கூடியது. அதைப்பார்க்கிலும் அதிக பெரிதானசரீ ரத்தை யுடைய ஆடு 10 வருஷங்களுக்கு மேல் ஜீவிப்பதில்லை. ஏனென் றால் கிளிகளுக்கு ஆகாரமாகிற பழங்களும் விதைகளும்ஆயுள் விருத்தியை யும் தேக புஷ்டியையும் கொடுப்பதுடன் அவைகள் கஷ்டமில்லாமல் ஜீர ணிக்கக்கூடியவை. ஆடுகளுக்கு விசேஷ ஆகாரமாகிற புல் பூண்டுகளோ அநேகவிதமாக உபத்திரவத்தை உண்டுபண்ணி ஆயுள் நீளவொட்டாமல் தடுக்கின்றன. நாம் நமது சரீரத்தை அதிக சிரமத்துக்கு உள்ளாக்கி தொந்தரவான வேலைகளை அடிக்கடி செய்வதும் நம்முடைய ஜீவகாலத் தைக்குறைக்கும். இந்த விஷயம் அநேகருக்குத் தெரியாமல் மோசம் போகிறார்கள். எவ்வளவுக்கெவ்வளவு வேலை யில்லாமல் தூங்குகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமக்கு தேகசௌக்கியமும் ஆயுள் விருத்தியும் உண் டாகுமென்பது சித்தம். ஆகையினால் தான் முதலை, தவளை, ஆமை, முத லான பிராணிகள் வெகு காலம் ஜீவிக்கின்றன.

ஜலத்தில் வசிக்கும் அநேக மீன்கள் நீண்டகாலம் உயிரோடிருக்கின் றன. ஏனென்றால், அவைகள் நீரில் வசிக்கிறபடியால் நிலப்பிராணிகளு க்குள்ள கஷ்டங்களில்அநேகம் அவைகளுக்கில்லை. நிலத்திலிருக்கும் ஜந்துக் கள் சீதோஷ்ணம் மிகுதியினால் மிக தொந்தரவை அடைகின்றன. நீர்ப் பிராணிகளோ ஜலத்தில் சீதோஷணம் மிகுதியில்லாமல் எப்பொழுதும்மி தமாயிருக்கிறபடியால் மேற்கூறிய தொந்தரவினின்று விலக்கப்பட்டிருக் கின்றன. நமது சரீரமாகிற யந்திரமானது இவ்வுலகத்தில் நேரிடுகிற சுக துக்க கஷ்டங்களைச் சகிக்கக்கூடிய சக்தியுள்ளதா யிருக்கவேண்டும். அப்படி யில்லாததினால் தான் இளமைப் பிராயத்தில் மரணம் விசேஷமாக நேரிடுகி றது. பிறக்கிற குழந்தைகளில் பத்திலொருபாகம் பிறந்தமாதத்திலேயே

இறக்கின்றன. ஒரு வருஷத்துக்குப் பிறகு முக்கால்பாகம்தான் தேறுகிறது. 5 வயது ஆகிறதற்குள் அரைவாசி குழந்தைகள் செத்துப்போகின்றன. 11க்கு மேல் 12ம் பிராயத்துக்குள்ளாக விசேஷமாக மரணம் நேருகிறதில்லை. ஆனால் அது முதல் 25 வயது வரையில் மரணக்கணக்கு கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கிறது. மறுபடியும் 25க்கு மேல் 35 வயது வரையில் அதிகமாக மனிதர்கள் இறக்கிறதில்லை. 35 வயதுக்கு மேல் நாளாக நாளாக இறப்பவர்களின் தொகை அதிகமாகிறது. இவ்விதம் பற்பல வயதுகளில் மரண வித்தியாசம் ஏற்படுவதற்கு காரணம் என்னவென்று சற்று யோசிப்போம்.

K. நாராயணசுவாமி அய்யர் பி. ஏ.

(இன்னும் வரும்.)

திருப்தி.

கமலாபுரி என்பதோர் ஜமீன் உண்டு. அந்த ஊரினுடைய ஜமீன்தாரருக்கு குணமதி என்கிறபெயரையுடைய ஒருமனைவி இருந்தாள்; மிகவும் பக்தியுடையமாது. இவள் ஓர் நாள் காலையில் தங்கள் பூந்தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தாள். அப்பொழுது தன் தாதிவந்து "யாரோ ஓர் பெண் தங்களைப்பார்க்கவேண்டும் என்கிறாள்" என்றாள். உடனே அவளை வரவழைத்தாள். வந்த அப்பெண், கருநிறமுடையவளாயும், அழகில்லாதவளுமாயுமிருந்தாள். அவளை யாரென்றுகேட்க, தான் ஜீவனார்த்தமாகவந்திருப்பதாயும், தன்பெயர் கோகிலம் என்றும் சொன்னாள். குணமதியாரிடத்திலும் "தாயொக்கும் அன்பில்" ஆனபடியால், தன்தோழியாக அக்கோகிலத்தை அமைத்துக்கொண்டாள். அன்று மாலையில், அற்புதம் என்னும் வேறொரு பெண்ணும் அவ்விதமேவந்து தோழியாக அமைந்தாள். இரண்டொருதினம் சென்று ஞானநாயகி, பாலலோசனி, என்கிற இரண்டு பெண்கள் வந்து அக்குணமதிக்கு தோழியாக அமர்ந்தார்கள். இத்தோழிகள் நால்வரில், அற்புதம் சிறிது அழகுடையவள்; ஞானநாயகிநிறம் கறுப்பாயினும் மிகவும் அழகுடையவள், பாலலோசனியும் அழகுநிறைந்தவள். இந்நால்வரும், ஓர் நாள், நந்தவனத்தில் உட்கார்ந்து நிலாவில் பேசிக்கொண்டிருக்கையில், பாலலோசனி மற்ற மூவரில்ஒருத்தியை நோக்கி "அக்கா நிலாவொளியும், சிங்காரமண்டபமும், பூஞ்சோலையும் எவ்வளவு அழகாயிருக்கிறது" என்றாள். கோகிலம் அதைக்கேட்டு "பாவிக்கு மாலையிட்டு இத்தனைநாள் என்ன கஷ்டப்பட்டேன்! அம்மா ஒழித்துவிட்டு சுகமடைந்தேன்" என்றாள். அற்புதம் உடனே

"என்ன கஷ்டம்," என்றாள். அதற்கு கோகிலம் தன் நாயகன் அதிரூப லாவண்யமும் கல்வியும் அடைந்திருந்தும், நித்தியதரித்திரன் என்று சொன்னாள். இதைக்கேட்டு அற்புதம் என்கணவன் செல்வமுடையவனாயிருந்தும் என் இஷ்டப்படி நடவாதவனாதலால் இவ்விதம் நான் வந்துவிட்டேன் என்று சொன்னாள். ஞானநாயகியும், தான் ஓர் தாசில்தார் மருமகளென்றும், தனக்கு எல்லா நகைகள் இருந்தும் ஓர்வைரக்கம்மல் வாங்கித்தர மாட்டேனென்று சொன்னதால் வெறுத்துவந்து விட்டதாயும் சொன்னாள். இவைகளையெல்லாம் கேட்ட பாலலோசனி, தன் சிறப்பையும், தன் கணவன் பெருமையையும் உரைத்து தன்னைத்தன் கணவன் அடிக்கடி அடித்துப் புடைப்பதால் மனஞ் சலித்து, தன் செல்வாக்கை யெல்லாம் விட்டு வந்ததாயும் சொல்லி கண்ணீர் விட்டாள். இப்படி பேசிக் கொண்டிருக்கையில், குணமதிகுரலைக் கேட்டு இந்நால்வரும் எழுந்து சென்றார்கள்.

இந்நால்வரிடத்தும் குணமதி தன் தங்கையர்போல் அன்பு பாராட்டி வந்தாள். இவ்விதம் சில நாள் சென்றன. குணமதியின் புருஷராகிய ஜமீன்தார் அழகில்லாதவராயினும், கல்வியும், செல்வமும் நிறைந்தவர். ஆயினும் வினையாரைவிட்டது? கோபுரம் குப்பையாவதும், குப்பைகோபுரமாவதும் சாதாரண மல்லவா? ஜமீன்தாருக்குத் தன்னுடையஜமீன்போய் ஏழைமைஸ்திதியை அடைந்து விட்டார். இவருக்கு ஓர்வித பைத்தியமும் உண்டாய் விட்டது. இவருடைய மனைவியாகிய குணமதியோ அதிரூபவதியும், செல்வத்திற் பிறந்தும் அதற்கேற்ற கல்விச்செல்வ முடையவளாயு மிருந்தாள். தற்காலம் தன் கணவனுக்குண்டாயிருக்கும் கஷ்டகாலத்தைக் குறித்துச் சிறிதும் மனவெறுப்படையாமல் தான் சென்று நெல்குத்தி அதனால்வரும் கூலியால் தன் புருஷனைக் காப்பாற்றிவந்தாள். இவளுடைய தோழிகளாகிய நால்வரும் இவளுடன் இரண்டொருமாதம் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்தார்கள். பின்பு குணமதியின் தாய்வீடு மிக்க செல்வமுடைய தென்பது இவர்களுக்குத் தெரியவந்தது. உடனே இவர்கள் குணமதியினிடம்போய் "அம்மா உன்கணவனாகிய பித்தனோடு துன்பப் படுவதை விட்டு, உன் தாய் வீடுபோய்ச் சேரலாம் வா" என்றார்கள்.

இதைக்கேட்ட அம்மாது சிரோன்மணி, உள்ளந் துடித்து, இரண்டு கண்ணினின்றும் நீர் ததும்பசொல்லத்தொடங்கினாள். "என் சகோதரிகளே! நீங்கள் சொல்லியது வியப்பினும் வியப்பாயிருக்கிறது. நீங்களும் இப்படிச் சொல்வீர்களென்று நான் நினைக்கவில்லை. கணவனைவிட்டுப்பிரிந்துசுகமடைய எண்ணும் பரமசண்டாளியும் உலகிலுண்டோ! "மருவியகாதன் மனையா

ளுந்தானும், இருவரும் பூணடுப்பினல்லால் ஒருவரால், இல்வாழ்க்கையென்னுமியல்புடையவான்சகடம், செல்லாது தெற்றிற்று நின்று,” என்றும் “அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட” என்றும், “கற்புடையபெண்டிர்தங்கணவனைவிட்டு கஷ்டத்தினும்பிரியார்” என்றும் நூல்கள் கூறுகின்றனவே, கணவன் சுகமாயிருக்கும்போது அவருடன் கூடவிருந்து எல்லாவித சுகபோகங்களை அநுபவிக்கவில்லையா? அவருக்கு கஷ்டம்வந்தபோது அவருடன் கூடவிருந்து அக்கஷ்டத்தை யனுபவிக்க மனம் வெறுப்படையலாமா? சௌக்கியமாயிருக்கும்போது எவ்வளவு சந்தோஷமாயிருந்தோமோ அதனிலும் எண்மடங்குசந்தோஷமுடையவர்களாயிருப்பதாய்நம் கணவனுக்குக் காண்பிப்பதும், நம்முடைய நிழல் நம்மைவிட்டுப்பிரியாதிருப்பதுபோலவும் எக்காலத்திலும் கணவனைவிட்டுப் பிரியாமலிருப்பதுமல்லவோ கற்புடைப்பெண்டிர்கழகு. இப்படியிருப்பதை விட்டு கெட்டகாலத்தில் தாய்வீடுபோகலாமா? போனாலும் அங்கும் நமக்கு அவமானம்தானே? அன்றியும் நளமகாராஜா தமயந்தி இவர்கள் கெட்டகாலத்தில் என்ன செய்தார்கள்? அதிகமாக முன்படித்திராவிட்டாலும் “சுதேசமித்திரன் பத்திரிகையில் சென்ற செப்டம்பர் மீ 26உல் பதிப்பித்த நளாயனிசரித்திரத்தை நான் அன்று பத்திரிகையில் உங்களுக்குக்காட்டியதைமறந்தீர்களோ? நமக்காக ஏற்பட்டுள்ள மாதர்மனோரஞ்னியில் சென்றவருஷம் பலபதிப்பில் சாவித்திரி சரித்திரம், லேடிஜேன் கிரே அம்மாள் சரித்திரம், வாசுகியம்மாள் சரித்திரம், இவைகளைப் படிக்கும்படி உங்களுக்குச் சொன்னேனே. ஜேன்கிரே தன் பிராண நாதர் கொலைபுரியப் படுவதற்காக “பாவியான என்னை மனைவியாகக்கொண்டு ஒருபலனையும் காணாமற்போன போதிலும் உயிரையும் இழக்கும்படியானசதி தங்களுக்கு வரவேண்டுமா” என்று புலம்பியதாகப் படித்தது என்மனதில் பதிந்திருக்கிறதே “ஏர் பிடித்தவன் என்ன செய்வான் பானை பிடித்தவள் பாக்கியமல்லவா?” லேடிஜேன் கிரேயை மணச்காவிட்டால் டட்ளிக்கு மரணம் நேர்ந்திருக்குமா? (என்று சொன்னபோது இந்நால் வரும் முகங்கள் வாடினவர்களாய ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தார்கள்) கணவனும் மனைவியும் ஒன்று என்பது பணத்திற்காகவா? மணம் செய்வது பணத்திற்காகவா? எவ்வித துன்பம் வந்தாலும் நான் என் கணவனைவிட்டு நீங்கமாட்டேன் அவருடைய சுகமும் துக்கமும் என்னுடையதுதான்” என்றாள். உடனே இவர்கள் கண்களினின்றும் நீர் தாரை தாரையாக ஓடிவந்தது.

இவைகளையெல்லாம் கேட்ட இப்பெண்கள் மனம்பதறி, கைகட்டி நின்று “நாங்கள் இப்படி யெண்ணாமல், எங்கள் கணவர்களை விட்டு வந்தோம்” “எங்களை மன்னிப்பீராக” என்று பிரார்த்தித்தார்கள்.

"நல்லாரோடிணங்கி யிருப்பதுவும் நன்றே" ஆனபடியால், குணமதி யென்னும் மாது சிரோன்மணியைச் சேர்ந்ததால் இவர்களுடைய தீக்குணம் மாறி அவரவர்கள் வீடுபோய்ச் சேர்ந்து கணவருடன் கூடிவாழ்ந்தார்கள்.

பொ. மங்கையர்க்கரசியம்மாள்.

* Air: "காற்று"

நமக்குள் படித்தவர்களானாலும், படிக்காதவர்களானாலும், ஒவ்வொருவருக்கும், கனபதார்த்தங்கள், ஜலபதார்த்தங்கள், இவைகளின் இயல்பு நன்றாய்த் தெரியும். ஏனென்றால் நாம் அவைகளைக்கண்ணால் பார்க்கிறதுமல்லாமல் ஸ்பரிசிக்கவும் கூடும். அல்லாமலும், நாம் அவைகளை எடைபோட்டு நிறுக்கவும் அளக்கவும் கூடும். சில கன-ஜல-பதார்த்தங்களை நாக்கினால் ருசிபார்த்து அறியலாம். சிலவைகளை வாசனையினாலும் அறியலாம். ஆனால் காற்று அத்தன்மையுள்ளதல்ல. அதின் வழியாய் வெளிச்சம் ஊடுருவிச் செல்லும். அது கண்ணுக்குப் புலப்படமாட்டாது. அதை முகர்ந்து பார்க்கவும், ருசிக்கவும் முடியாது. அசைவற்று இருக்கும்போது அதை நாம் ஸ்பரிசிக்கவும் முடியாது. "காற்று" என்ற ஒரு பதார்த்தம் உண்டென்று அது அசையும்போது தான் நமக்கு புலப்படும். கட்டையை எடைபோட்டு நிறுப்பதுபோல் காற்றை எடைபோட்டு நிறுப்பதை உங்களில் யாராவது கண்டிருக்கிறீர்களா? அல்லது தண்ணீரை படியால் அளப்பது போல் காற்றை அளக்கக்கண்டிருக்கிறீர்களோ?

காற்றானது, கன பதார்த்தங்கள் ஜல பதார்த்தங்கள் இவைகளைப் போல் நம்முடைய ஐம்புலன்களுக்கு லேசாய் அகப்படுகிறதில்லை என்பது மெய்யே. ஆனாலும், உங்களில் எல்லாருக்கும் தெரிந்த சில விஷயங்களால் கன-ஜல-பதார்த்தங்கள் உண்டென்பது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் "காற்று" என்ற ஒரு வஸ்து உண்டு என்று ருசுப்படுத்தலாம். ஓர் உதாரணம், ஒரு பக்ஷியானது காற்றில் பறக்கும்போது அதைத்தரையில் விழாமல் தாங்குவது என்ன? அந்த பக்ஷியை விழாமல் தாங்குவதற்கு ஏதாவது ஒரு ஆதரவு கட்டாயமாய் வேண்டுமல்லவா? கண்ணிற்கு புலப்படாத காற்றைத்தவிர வேறே என்ன ஆதரவு அதற்கப்பொழுது இருக்கக்கூடும்.?

* இது பிரசிடென்சி காலேஜ் ரசாயன சாஸ்திரப்புலவரும் போதகருமான டாக்டர் W. H. வில்சன் துரையவர்கள் சென்னை மாதர்சங்கத்தில் செய்த பிரசங்க சாரம்.

மேற்சொல்லியபடி, கன-ஜல பதார்த்தங்களுக்கும், காற்றுக்கும் வெகு வித்தியாசம் உண்டு. இந்த வித்தியாசத்தினால் தான் சுமார் 100 வருஷத்துக்கு முன் வரை காற்றைக்குறித்து தெளிவாயும், திட்டமாயும் யாதொன்றும் தெரியவில்லை. சென்ற நூற்றுண்டில் தான் காற்றின் விஷயமாய் வெகு சங்கதிகள் தெரியப்பட்டிருக்கின்றன. ஓர் உதாரணம்:— காற்றென்பது ஒருவிதமல்ல பலவிதமான காற்றுகள் உண்டென்று கண்டு பிடித்திருக்கிறார்கள். அல்லாமலும் அவ்வெவ்வேறு காற்றுகள் வெவ்வேறு தன்மைகளை உடையவைகளென்றுங் கண்டு பிடித்திருக்கிறார்கள். அநேக ஆயிரவருஷமாய் அதாவது, ஆதிகாலத்திலிருந்து சென்ற நூற்றுண்டுவரை ஒரே ஒருவிதமான காற்றுதான் உண்டு என்று நம்பியிருந்தார்கள்.

மேல்சொன்ன வெவ்வேறு காற்றுகளைக் காட்டுவதற்கு முன் உலகத்தில் உள்ளோர்கள் எல்லாரும் காற்று என்று சொல்லும் ஒரு பதார்த்தம் உண்டு என்பதற்கும் அந்த காற்றின் சில முக்கியமான குணங்கள் அல்லது சுபாவங்களைக் காட்ட சில சோதனைகளையும், அதன் பின்பு சாதாரணமாய் நாம் "காற்று" என்று சொல்லும் காற்றிற்கும் மற்றவிதமான காற்றுகளுக்கும் உண்டான பேதங்களை வெளிப்படையாய் யாவரும் தெரியும்படியாகவும், அதன் பிறகு, சாதாரணமான காற்று அநேக ஆயிர வருஷங்களாய் நினைக்கப்பட்டபடி ஒரு தனிமையான வஸ்து அல்ல ஆனால் அதில் வெகு வித்தியாசமான பல காற்றுகள் உண்டென்றும் பல சோதனைகளால் மாதர்களுக்கு நன்கு விளங்கும்படி பல காற்றுகளை டாக்டர் வில்சன் துரையவர்கள் காட்டினார். பலவிதமான காற்றுகளிருக்கின்றன. இவைகள் பார்வைக்கு எல்லாம் ஒன்றைப்போலவே இருக்கின்றன. ஆனால்அவைகளின் குணம் வெவ்வேறே.

ஆகையால் ஒவ்வொன்றையும் சாமான்னிய பார்வையினால் மாத்திரம் மேலானதென்றுந் தாழ்மையானதென்றும் நினைக்கக்கூடாது. ஒவ்வொன்றையும் பரீக்ஷைசெய்து தான் அறியவேண்டும் என்னும் சற்பனையை மாதர்களுக்குப் போதித்து உபந்நியாசத்தை துரையவர்கள் முடித்தார்.

மிஸ்டர் இராமசுவாமி சிவாவின் மனைவியார் துரையவர்கள் இவ்வளவு சிரத்தை எடுத்துக்கொண்டு உபந்நியாசம் செய்ததற்காக அவருக்கு வந்தனம் அளித்தார். உடனே துரையவர்கள் மாதர்களின் தொகை சொற்பமாக விருக்கின்றதென்றும் வந்திருந்த மாதர்கள் பிரசங்கத்தை கவனமாய் கேட்டதைக் குறித்து அவர் அதிக சந்தோஷப்பட்டதாயும் பதிலளித்தவுடன் சபை கலைந்தது.

* துரையவர்கள் மாதர்களுக்கு உபந்நியாசம் செய்வதின் பொருட்டு அதிக ஊக்கத்துடனும் சந்தோஷத்துடனும் பிரசிடென்சி காலேஜி மண்டபத்தில் கிரூஸைன் எண்ணெயிலிருந்து ஆயில்கேஸ் என்று சொல்லப்பட்ட ஓர்வித வாயுவின் சக்தியினால் அதிக பிரகாசமான விளக்கை ஏற்றி வைத்தது முதற்சடவையெனக்கேட்டு மிக்க சந்தோஷப்படுகிறோம்.

மிஸ்ஸஸ்பில்டர்பெக், மிஸ்ஸஸ் வில்சன், மிஸ் வில்சன், மிஸ்ஸஸ் பிட்டன் டிரிக், மிஸ்ஸஸ் ராயபஹதூர் வீரேசலிங்கம் பந்துலுவும் இன்னும் 12-மாதர்களும் இந்த உபந்நியாசத்திற்கு வந்திருந்தார்கள்.

மிஸ் ஷண்முகம் மீடிங்குக்கு வர முடியாமையால் பிரசிடென்சி காலேஜ் அசிஸ்டெண்டு ஸைன்ஸ்புரொபஸர் மிஸ்டர் டி. கே. ஹனுமந்தராவு பி. ஏ. அவர்கள் தமிழில் இந்த உபந்நியாசத்தை அதிக தெளிவாக மொழிபெயர்த்து மாதர்களுக்குச் சொன்னார். * ப - ர்.

மாதர்களும், வித்தையும்.

கல்வி நமக்கு அளவிறந்த சகாயஞ்செய்கின்றது. புஸ்தகங்கள் தோழர்களைப்போல விளங்குகின்றன. இவைகளைப்போல எப்பேர்ப்பட்ட உறவினரும், சினேகிதரும் நமக்கு உதவியாகார்கள். கல்வியானது நமது செவிக்கு இனிமையாகவும், நற்குண நற்செய்கை, நற்புத்தி, சந்துஷ்டி இவை முதலியவைகளை விளைவிக்கக் கூடியதாயும், நம்மனதில் விளையும் எவ்விதமான துக்கம், துயரம் முதலிய மனச்சஞ்சலங்களையும் "சூரியனைக் கண்டபனிபோல" நீங்கச்செய்யும் குணமுடையதாயும் இருக்கிறது. அல்லாமலும், கடவுள் தம் பக்தரிடம் காட்டும் அன்பும், பட்சமும், அவருடைய திருவிளையாடல்களையும் ஜகத்ரக்ஷகன் தம் பக்தர்கட்கு எவ்விதமான ஆபத்துகள் வந்தாலும், அவ்வாபத்துகளிலிருந்து காத்து இரட்சிக்கும் கருணையையும் புராணங்களில் வாசிக்க வாசிக்க நம் உள்ளம் உருகி நமக்குண்டாகும் ஆநந்தத்திற்கும், சந்தோஷத்திற்கும் முடிவில்லையல்லவா? இவைகளையெல்லாம் படிக்கப்படிக்க நமக்குப் புரந்தரன்மீது எவ்வளவோ அன்பும், அவனை அர்ச்சிப்பதனால் அவனை நம்பின நமக்கு யாதொரு ஆபத்துகளும் அணுகாதென்றும் நமக்குப் பரமாத்மாவின் மீது எவ்வளவோபக்தி உண்டாகிறது. மாதர்கள் கல்வி கற்பதினால் பதிவிரதாதருமம், நல்லவிவேகம், இல்லறஒழுக்கம், தெய்வபக்தி முதலிய நல்ல ஒழுக்கங்களை அடைவார்கள். மாதர்களுக்கு கல்வி

யழகு தான் அழகு. மாதர்கள் கல்வியைக் கற்கமுயல்வது அவர்களுக்கு நன்மையல்லது துன்மையில்லை. மாதர்களுக்கு நகை முதலிய பூஷணங்கள் எல்லாவற்றிலும் கல்விதான் திலகம்போன்றது. நல்ல புஸ்தகங்களைப் படிக்கப் படிக்க எவ்வளவோ பிரியமாக விருக்கும். அவைகளைப் படிக்கும்போது பசி, தாகம் தெரிவதில்லை. மனவருத்தமெல்லாம் நீங்கிப்போகின்றன. கல்விகற்பதினால் மாதர்களை யாதொரு கெடுதியும், கெட்ட குணங்களும், பொறாமை, புறங்கூறல் முதலிய துர்க்குணங்களும் நெருங்கா. இவை முதலிய உத்தம குணங்களெல்லாம் தாங்கள் இளமையில் தம் தாய் தந்தையர் சகாயத்தினால் கற்கும் கல்வி கேள்விகளாலும், தாம் அடையப்பெற்ற நற்சகவாசத்தினாலும் உண்டாகும். தாய்தந்தையர் எவ்வித பிரயாசைபட்டாவது தம் மக்களுக்கு இளமையில் தானே எல்லாவித நற்குண நல்லொழுக்கங்களுக்கும் இருப்பிடமான கல்வியைக் கற்பித்துவரவேண்டியது. மாதர் பாலியத்தில் கற்கும் கல்வி அவர்கள் உள்ளத்தில் பதியுமே தவிற வயது முதிர்ந்தபின் கற்கும் கல்வி அவர்கள் உள்ளத்தில் பதியாது. அப்படி முதிர்ந்த வயதில் மாதர்கள் கல்விகற்க முயன்றால் வெகு பிரயாசைபட்டு கற்கவேண்டும். ஏனெனில் ஓர் மாது தான் ஓர் வீட்டிற்குத் தலைவியானபின் வாசிக்க முயன்றால் தன் வீட்டு சமுசாரத் தொழில்களில் மனஞ்செல்லுமேயன்றி வாசிப்பில் மனம் செல்வது வெகு பிரயாசை. வாசிப்புணர்ந்த மாதர் தம் ஓய்வு காலங்களில், புராணங்கள் வாசிக்கவும் தையல்வேலைசெய்யவும் இசைவார்கள். ஆதலால் சகோதரிகளே, நமக்கு சௌக்கியம், சந்துஷ்டி, நற்குணம், நற்செய்கை, நற்புத்தி, பதிவிரதாதருமம், இல்லற ஒழுங்கு, தெய்வபக்திமுதலிய நல்லொழுக்கங்களுக்கு இருப்பிடமான விலையுயர்ந்த கல்வியாகிய பூஷணத்தை அணியுங்கள்.

மரகதவல்லி.

NEWS & NOTES.

மலையாளத்தில் பி. ஜானகியம்மாள் வி. ஜானகியம்மாள் என்ற இரண்டு தீயாஜாதிப் பெண்கள் சென்ற மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறியிருக்கிறார்கள்.

இந்த வருஷம் பம்பாயில் 5-பாரசீகப் பெண்கள் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி யிருக்கிறார்கள்.

அமெரிக்காவில் ஒரு பையன் ஒரு ஊசியை முழுங்கிவிட்டானாம், இது மார் எலும்பில் சிக்கிக்கொண்டது டாக்டர்கள் அறுத்து எடுப்பது அசாத்தியமென்று எண்ணி காந்தத்தை இவன் தொண்டையில் வைத்து அதன் சக்தியால் இதை எடுத்து விட்டார்களாம்.

மிஸ்தாபர்ன்,-மிஸ்லீலாவதிசிங். என்பவர்கள் லக்ஷ்மணபுரியிலுள்ள பெண் பாடசாலைக்கு வேண்டிய பணம் சம்பாதிக்க அமெரிக்காவிற்குச் சென்றிருக்கிறார்கள் சுமார் லக்ஷம் ரூபா வரையிலும் சேர்ந்திருக்கிறதாம். இவர்கள் நம் நாட்டுப் பெண்களுக்காக உழைத்துவருவது மெச்சத்தகுந்ததே,

---

பிரசிடென்சி காலேஜியில் மார்கரட் டிநெல்ட்டோ (Margarett Denalto) என்ற மாது ரசாயன சாஸ்திரம் பி. ஏ. பரீட்சைக்கு படித்துவருவதைக்கேட்க மிக்க சந்தோஷப்படுகிறோம். இவர் திருவந்தபுரம் மகாராஜா பெண் பாடசாலையில் படித்துஇவ் வருஷம் எப். ஏ. பரீட்சையில் தேறியிருக்கிறார். வயது சுமார் 17 - இவருடைய சுய பாஷை தமிழ்.

சௌபாக்கியவதி உருக்குமணி அம்மாள் மைசூர் மகாராணி பெண் பாடசாலையில் படித்துச்சென்ற டிசம்பர் மாதத்தில் நடந்த எப். ஏ. பரீட்சைக்குச்சென்று தேறியிருப்பதைக் கேட்க சந்தோஷப்படுகிறோம். பி. ஏ. பரீட்சைக்கு வீட்டிலிருந்தே தன் உபாத்தியாயர் மூலமாய்ப் படிக்கத் தீர்மானித்திருக்கிறதாகத் தெரியவருகிறது.

கல்கத்தா சர்வகலாசாலை.—இந்த வருஷம் மேற்படி சர்வகலாசாலையாரால் அடியில் குறிக்கப்பட்ட மாதர்களுக்கு பட்டமளிக்கட்டது. டவ்டன் காலேஜிலிருந்து மாந்கே ரேட்குப்தாவென்ற மாது எம். ஏ. பட்டமும், அதே காலேஜிலிருந்து லிலி கிரிஸ்டியன் என்ற மாதும், ராவென்ஷா காலேஜிலிருந்து இஸாபெல்லா ஸாமுவேல்ஸ் என்ற மாதும் பி. ஏ. பட்டமும் பெற்றார்கள்.

அமெரிக்காவில் வாஷிங்டன் என்னும் ஒரு பெரிய நகரத்தில் ஒரு புத்தகசாலையிருக்கிறது. இதில் குருடர்கள் படிப்பதற்காக ஒரு தனிமையான இடம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இங்கு பலவிதமான புஸ்தகங்களும், கீதவாத்தியங்களும் இருக்கின்றன. கீதவாத்தியங்களைக் கேட்கவும் குருடர்களுக்கென்று அச்சிடப்பட்டிருக்கும் புஸ்தகங்களைப் படிக்கவும் அநேகர் செல்லுகிறார்களாம். இந்த நன்மை செய்தவர் மிஸ் ஹெலன் மேக்காம்பல் என்ற மாது.

சென்னைக்குத் தெருக்கிலுள்ள அடையாரில் கர்னல் ஆல்காட் துரையவர்கள் பஞ்சமப்பெண்களுக்காக ஒரு பாடசாலை ஏற்படுத்தி யிருக்கிறார். மேலும் இன்னும் இரண்டு டெண்கள் பாடசாலைகள் அங்கிருக்கின்றன. இவைகளுக்கு மிஸ்சாரா பாமர் பி.ஏ. (Miss. Sarah Palmer, B.A.,) என்றமாது மேல் பார்வை பார்ப்பவர் அதாவது சூபிரிண்டெண்டண்டு. இந்த மாதுவினுடன் பெண்கள் கல்வியைக் குறித்தும் அப்பாடசாலையில் போதிக்கும் பாடங்களைக் குறித்தும் நாம் கேட்டதற்கு அவர்களுக்கு கணக்கு, இங்கிலீஷ் தமிழ், பாகசாஸ்திரம், முதலியவைகளைப் போதித்துவருவதாகவும், பெண்கள் அதிக அக்கரையுடனும், ஊக்கத்துடனும் படித்து வருவதாகவும் சொன்னார். ஆல்காட் தர்ம பாடசாலையில் 13 - பெண்களும், எச். பி. எம். பாடசாலையில் 8 - பெண்களும், தாமோதரம் தர்ம பாடசாலையில் 22 - பெண்களும் படிக்கிறார்களாம். இப்பாடசாலைகள் மென்மேலும் விருத்திக்கு வரும்படியாகவும், மிஸ்பாமர் மாது நீடூழி வாழும்படியாகவும் ஈசன் அருள்புரிவாராக.